திருவாசகம் - 34

உயிருண்ணிப்பத்து கதைவழிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.

உ

சிவமயம்

உயிருண்ணிப்பத்து கதை வடிவில்
சிவானந்தம் மேலிடல்
திருப்பெருந்துறையில் அருளியது

பைந்நாப் பட அரவேரல்குல் உமைபாகம் தாய் என்

மெய்ந்நாள்தொறும் பிரியா வினைக்கேடா விடைப்பாகா

செந்நாவலர் பசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்

எந்நாட்களித் தெந்நாள் இறுமாக்கேன் இனியானே. 01

சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றிக் கொண்டிருந்தார். கவிதா கண்களை மூடியவாறு ஆச்சிரமச் சிவலிங்கத்தின் அருகில் இருந்தாள். அவளுக்குப் பழைய நினைவு வந்தது. அவள் பெரிய வசதியானவள் அல்ல. ஒரு நாள் அவள் தனது சிநேகிதியான மதிவதனியின் வீட்டுக்குச் சென்றாள். அப்போது வாசலில் மணிவண்ணன் நின்று சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. தலையைக் குனிந்து கொண்டு சென்று விட்டாள். அவள் உள்ளே செல்ல அவனும் உள்ளே சென்றான். “மதி இல்லை, வந்திடுவள் இருங்கோ” அவனது பேச்சை நம்பிய கவிதா அங்கிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்டாள். சிறிது நேரத்தில் ஒரு பெண் குளிர்பானம் கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்த பின் அவளுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. மூன்று நாட்கள் வேறொரு வீட்டில் மணிவண்ணனோடு இருக்க வேண்டிய சூழ்நிலை. அதன் பின் விடுதலை கிடைத்தது.

கவிதாவின் கண்களால் கண்ணீர் வடிந்தது; “சிவனே, எதுவும் அறியாத எனக்கு நடந்த கொடுமை உனக்குத் தெரியும். அப்படியிருக்க ஒரு பெருவாழ்வை எனக்கு அமைத்துத் தந்துள்ளாய். அவர் ஒரு பொறியியலாளர். என்னை விரும்பிப் பலமுறை கேட்டவர். நான் மறுத்தபின் கதிரேசன் தாத்தாவோடு கதைக்க அவர் எனக்கு நடந்த கொடுமையை அறிந்து இரக்கப்பட்டார். “கவிதா நீயாக விரும்பி அவனுடன் சென்று குடும்பமாக வாழ்ந்த பின்பு அவன் கைவிட்டுவிட்டுச் சென்றால் அது உனது குற்றம். எதுவும் அறியாத உன்னை அவன் கொடுமைப்படுத்தியது விபத்து. அதை மறந்து விடு. இந்தச் சம்பவத்தை நீ சொல்லாது மறைத்தால் தான் பிற்காலத்தில்

பிரச்சினைகள் வரும். நீ எல்லாவற்றையும் கூறியதால் நான் உன்னை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறேன் என்றவர். அப்படியான ஒரு பெரும் தன்மை மிக்க உத்தமரை எனக்கு கணவனாக்கியது உனது பெருங்கருணை. அதனால் அதை எண்ணி எண்ணி நான் பரவசப்படுகிறேன். உனக்கு எப்படி நன்றி சொல்வது" என்று நினைத்தாள் கவிதா.

நானாரடி அணைவானொரு நாய்க்குத் தவிசிட்டிங்கு

ஊனாருடல் புகுந்தான்உயிர் கலந்தான் உளம்பிரியான்

தேனார்சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை உறைவான்

வானோர்களும் அறியாததோர் வளமீந்தனன் எனக்கே 02

"சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "சிவன் என்னைத் தன் வசமாக்கி ஞானச்செல்வத்தை எனக்கு அருளினான். அதனால் எதற்கும் உதவாத நான் பெறுதற்கரிய பெரும் பேற்றை பெற்றுள்ளேன்" என்கிறார். இது மாணிக்கவாசக சுவாமிகளுக்கு மட்டும் நடக்கக்கூடிய நிகழ்வல்ல. சிவனை அன்போடு துதிப்பவர்கள் அனைவருக்கும் நிகழும் நிகழ்வு. நீங்கள் நினைக்கலாம் மாணிக்கவாசகரின் பக்திக்கு நாம் நிகராவோமோ என்று. அது நிகராகாது தான். ஆனால் மெய்யன்புடன் வணங்கினால் நீங்கள் நினைப்பவை கிடைக்கும். வாழ்வில் பிடிப்பும் மகிழ்ச்சியும் உண்டாகும். ஒருவனது உழைப்புக்கேற்பத்தான் பொருள் வந்து சேரும். அதனால் உழைப்பைச் சிறிது சிறிதாக அதிகரிக்கப் பண்ணினால் முன்பைவிட வசதியாக வாழலாம். அதுபோலச் சிவனை வணங்குதலை அதிகரிக்க அதிகரிக்க அவன் உங்களது வசமாகி விடுவான். அதன்பின் நீங்கள் பெரும் அதிஷ்டசாலியாவீர்கள். நீங்கள் விரும்பியது கிடைக்கும். சிவன் கூட இருந்து வழிகாட்டுவான்" சுவாமியாரின் பேச்சுக் கவிதாவுக்குத் தேனாக இனித்தது. முன்பு கதிரேசனும் சுவாமியாரும் இதைத்தான் சொன்னவர்கள். அவர்கள் அனுபவமுடையவர்கள். நான் முதலில் அதை நம்பவில்லை. காலப்போக்கில் எனது மனம் அமைதியடையத் தொடங்கியது. அதனால் திருப்பள்ளியெழுச்சி பாடிச் சிவனை வசப்படுத்தினேன். சுவாமியார் சொன்னது போன்று நன்மைகள் பலவும் நடக்க ஆரம்பித்தன. சிவன் என்மீது அளவிட முடியாத அருளைச் செலுத்தி என்னைத் தன்வசப்படுத்தி எனக்குப் பெருவாழ்வு தந்து விட்டான். மகேசனது குடும்பம் வசதியானது. அதைவிடச் சிவபக்தி மிக்கது. அதனால் ஊரவர்கள் பலருக்கு அக்குடும்பம் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. மாமாவும் மாமியும் என்னைத் தங்கள் மகளாக நினைத்து எனக்குச் சேவை செய்கின்றனர். அதிகாலையில் எழுந்து காலை, மதிய உணவை மாமி தயாரித்து விடுவா. நாங்கள் எழும்பும்போது அவா சமையலை முடித்து விடுவா. இப்படி ஒரு குடும்பத்தில் என்னை வாழ்க்கைப்பட வைத்த சிவனுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்'' என்று நினைத்தாள் கவிதா.

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்

மனவாசகங் கடந்தான் எனை மத்தோன்மத்தனாக்கிச்

சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை

உறையும் பனவன்எனைச் செய்தபடிறறியேன் பரஞ்சுடரே. 03

“சிவனே, அந்தச் சம்பவத்திற்குப் பின் எனக்கு வாழப் பிடிக்கவில்லை. தற்கொலை செய்ய முயற்சித்தேன். இதை உணர்ந்த எனது அப்பா என்னைக் காப்பாற்றுவதற்காகக் கதிரேசன் தாத்தாவிடம் கூட்டி வந்தார். கதிரேசன் தாத்தா எமக்கு உறவினர் அல்ல. தெரிந்தவரும் அல்ல. பல ஊர்களிலும் உள்ள சிவன் கோவில்களுக்கு அவரும் நல்லைநாதனும் மேலும் பல சிவனடியார்களும் சென்று தரிசிப்பது வழக்கம். அந்த வகையில் தான் அவர்கள் எமது ஊர்ச்சிவன் கோவிலுக்கு வந்து சிவனை வணங்கினர். கோவிலின் சுற்றாடல் பற்றைகளாக இருந்தமையால் அவர்கள் சில நாட்கள் அங்கு தங்கியிருந்து ஊர் மக்களை அழைத்துச் சென்று கோவிலின் சுற்றாடலைச் சுத்தப்படுத்தினர். அவர்களோடு அப்பாவும் சேர்ந்து கொண்டார். அதன்பின் அவர்கள் இடையிடையே எம்மூர்ச் சிவன் கோவிலுக்கு வருவார். வரும் வேளைகளில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் பெற்றோர்களை அழைத்துப் புத்திமதி கூறுவார். கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுப்பார். மேலதிக வகுப்புக்களை வைத்து நடத்துவார். அதனால் அப்பாவுக்கும் கதிரேசன் தாத்தாவுக்கும் உள்ள நெருக்கம் அதிகரித்தது. அதனால் தான் அப்பா இங்கே என்னை அழைத்து வந்தார். அவரின் சொற்படி நான் நடந்ததால் எனது வாழ்வு மேன்மை அடைந்தது. என்னைப் பொறுத்தளவில் சிவன்தான் கதிரேசுத் தாத்தாவாக வந்து எல்லோருக்கும் உதவி செய்கிறார்.

சுவாமியார் உரையாற்றிக் கொண்டிருந்தார்;“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சிவன்மீது வைத்திருந்த அன்பை வேறு எவராலும் வைக்க முடியாது. அதற்காகச் சிவன்மீது அன்பு கொள்ளாமல் இருக்க முடியுமா. ஒவ்வொருவரும் தன்னாலியன்ற அன்பைச் செலுத்துங்கள். அவர் சொல்கிறார்; “சிவனே, நான் யார் என்று எனக்குத் தெரியாது. அது போல இரவு பகல் வந்து போவதும் தெரியாது. மனதில் பல எண்ணங்களைக் கொண்ட என்னை உன் வசமாக்கினாய்” என்கிறார். அவரின் நிலை வேறு. இப்போது வாழ்வோர், “நான் யார் தெரியுமா...?” என்று கேட்பர். மாணிக்கவாசக சுவாமிகள் நிர்விகர்ப்ப சமாதிநிலை அடைந்தவர். இச் சமாதிநிலையை அடைந்தவர்களுக்கு அருகில் நடப்வை கூடத் தெரியாது. நான் அந்நிலையடையும்படி கூறவில்லை. சிவனை வணங்கினால் எல்லா நன்மையும் பெறலாம். அவனை

வணங்கமுன் நீங்கள் ஒழுக்கமுள்ளவனாக மாறுங்கள். மற்றவர்களை மதியுங்கள். உங்களை உயர்வாக நினைக்காதீர்கள். இதைச் செய்தால் சிவனின் அருள் கிடைக்கும்'' சுவாமியார் உரையாற்றிக் கொண்டிருந்தார். அதைக் கேட்கக் கேட்கக் கவிதாவின் மனம் பூரிப்படைந்தது.

வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர் வியனுலகில்

எனைத்தான்புகுந் தாண்டான்என் தென்பின்புரை யுருக்கிப்

பினைத்தான்புகுந் தெல்லே பெருந்துறையில் உறைபெம்மான்

மனத்தான் கண்ணின் அகத்தான் மறு மாற்றத்திடையானே 04

சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றிக் கொண்டிருந்தார். ''மனதில் இருக்கும் சுமைகள் சிவனைப் பார்த்தவுடன் வெளிப்பட்டு விடுகின்றன'' என்று எண்ணியவாறு சிவனை வணங்கிவிட்டுச் சுவாமியார் உரையாற்றுமிடத்திற்கு வந்தாள் கவிதா. ஏராளமான மக்கள் அமைதியாக இருந்து அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். "சிவனடியார்களே, சிவன் எல்லா உயிர்களுக்குள்ளும் அந்தர்யாமியாக இருந்து உயிர்களை வழிநடத்துகிறான். ஒரு நாள் கதிரேசன் அயலூரில் உள்ள சிவன்கோவிலுக்கு நல்லைநாதனுடனும் சில அடியார்களுடனும் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு அடர்ந்த காடு குறுக்கிட்டது. அவ்வழியால் செல்லக்கூடாது என்று அரசாங்கம் அறிவித்து ஒரு விளம்பரப்பலகை வைத்திருந்தது. அதைக் காணவில்லை. கதிரேசன் அவ்வழியால் செல்ல முற்பட்டபோது ஒரு வயோதிபர்; ''ஐயா எங்கே செல்கிறீர்கள். இப்பாதையை அரசாங்கம் தற்காலிகமாக மூடியுள்ளது. இக்காட்டுக்குள் தீவிரவாதிகள் மறைந்திருந்து போவோர் வருவோரை அச்சுறுத்திப் பணம் பெறுகின்றனர். அதனால் இப்பாதையைப் பாவிக்கக்கூடாது என்று ஒரு விளம்பரப்பலகை போடப்பட்டிருந்தது. அதை அவர்கள் தான் கழற்றியிருப்பார்கள். நீங்கள் வேறு பாதையால் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டு அந்த முதியவர் சென்றுவிட்டார். அப்பாதையால் சென்றிருந்தால் கதிரேசனும் அடியார்களும் பெரும் துன்பப்பட்டிருப்பர். சிவன் தானாக வந்து உதவுவான். இல்லாவிட்டால் யார் மூலமாவது உதவுவான். உயிர்கள் நல்ல முறையில் வாழவும், அன்பு கொள்ளவும், இந்திரியங்கள் வாயிலாகச் செயலாற்றவும் உதவி செய்கின்றான். அவனது அருளலை நெஞ்சம் உணரலாம். கண்களால் காணலாம்'' சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பேச்சு அவளை திகைக்க வைத்தது. "சொந்தபந்தமில்லாத என்னை, மிகுந்த துன்பத்தில் இருந்து காப்பாற்றி இன்பமாக வாழ வைப்பதற்காகக் கதிரேசனைப் படைத்த சிவனை நினைக்க அவளுக்கு அதிசயமாக இருந்தது.

பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி

நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்

தெற்றார்சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை இறைசீர்

கூற்றாங்கவன் கழல்பேணின ரோடுகூடுமின் கலந்தே 05

“சிவனடியார்களே, இங்கு வரும் எல்லோரும் உலகப்பற்று மிக்கவர்கள். அவர்கள் அப்பற்றுக்களைச் சிவனிடம் சொல்லி ஆறுதலடையவும், நிறைவேற்றவுமே இங்கே வருகிறார்கள். சில நாட்கள் வந்து பிரார்த்தனை செய்வார்கள். பின் அவை நடவாததால், “எல்லாம் பொய் ஏமாற்று” என்று சொல்லிவிட்டு சென்று விடுவார்கள். ஒரு செயல் உடனே நடக்குமா என்ன. ஒரு மரத்தை நட்டால் அது உரிய பருவம் வரை பயன் தராது. அது பயன் தரும்காலம் வரை பொறுமையுடன் இருந்து அதைப் பராமரித்தல் வேண்டும். உயிர்கள் அளவற்ற பற்றால் மிகவும் கேவலமான நிலையிலேயே உள்ளன. அப்பற்றுக்களைப் படிப்படியாகக் குறைத்தால் தான் பயன் கிட்டும். இதை உணருதல் வேண்டும். உணர்ந்து சிவனை மெய்யன்போடு வணங்கிப் பற்றுக்களை அகற்றுதல் வேண்டும். பற்றுள்ள வரை மனம் அடங்கமாட்டாது. மனம் அடங்கி ஒரு நிலைப்பட்டால் தான் இறைவன் எமக்கு அகப்படுவான். ஒரு வழிபோக்கன் காட்டு வழியாகச் செல்லும்போது தாகம் ஏற்பட்டது. அவன் செல்லும் வழியில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்து நீர் கலங்கியிருந்தது. அதை அவன் ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்தான். சில நிமிடங்களின் பின் கலங்கிய அந்நீர் தூய்மை அடைந்தது. அதைக் குடித்துவிட்டுத் தனது பயணத்தை அவன் தொடர்ந்தான். கலங்கிய நீரைக் குடித்தால் நோய்கள் வரலாம். இது போன்றது தான் வாழ்க்கை. மனம் எப்போதும் கலங்கிய குளத்தைப் போலவே இருக்கும். அதை அப்படியே விட்டால் மீளக் குழப்பம் அதிகரித்துப் பல்வேறு விதமான நோய்கள் உண்டாகும். இறை நினைவு வராது. அதனால் துன்பங்களைத் தரும். பற்றுக்களை நீக்கி என்றும் இன்பத்தைத் தரும். இறைபற்றை வளருங்கள். இறைபற்று உண்டானால் பற்றுக்கள் அகன்று, அவ்விடத்தில் ஞானம் தோன்றும். அதை வளர்ப்பதற்கு நல்லவர்களோடு சேருங்கள். இங்குள்ள பலரும் கதிரேசனுடனும் நல்லைநாதனுடனும் சேர அதுதான் காரணம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கடலின்திரையதுபோல் வரு கலக்கம்மலம் அறுத்தென்

உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ணம் நிறைந்தான்

சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்

படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான் செய்த படிறே. 06

“சிவனடியார்களே, சந்திரனைத் தனது தலையில் சூடிய சிவபெருமான் கடலில் எழும் அலைகள் போல மனதில் ஓயாது எழும்பிய சிந்தனைகளையெல்லாம் அழித்து என்னைச் சுத்தப்படுத்தி தன்வசமாக்கியது செயற்கரிய செயலென்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். மனம் கடலை விட ஆழமானது. சொற் கேளாதது. எதையும் தீர்மானிக்க விடாது. கடவுளை வணங்க வரும்போதோ அல்லது உணவை உண்ணும்போதோ அதில் நிலைத்திருக்காது எங்கெங்கோவெல்லாம் சென்று விடும். அது காற்றை விட வேகமானது. அதன் வேகத்தை அளக்கமுடியாது. இப்போது நான் பேசிக் கொண்டிருக்கிறேன். எத்தனை பேர் இதை அவதானித்துக் கேட்கிறீர்கள். அங்கு இருக்கும் பெரியவரொருவரைப் பாருங்கள். அவர் தானாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார். எனது பேச்சுச் சிவனின் பெருமைகளைப் பற்றியது. இதில் சிரிக்க என்ன இருக்கிறது. அவர் ஏதோ ஒரு மகிழ்வான நினைவில் இருக்கிறார்” என்று கூறும்போது கவிதா சுவாமியார் கூறிய அந்தப் பெரியவரைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டிருந்தார். மனம் எதை விரும்பி அனுபவிக்க நினைக்கிறதோ அந்த நேரம் பல சிந்தனைகள் உருவாகி விடுகின்றன. நான் இப்போது மிகவும் மகிழ்வாக வாழ்கிறேன். எனது கடந்த கால நினைவுகளைச் சிவன் தனது அருளால் அழித்தமையால் தான் எனக்குப் பழைய நினைவுகள் மனதில் எழுவதில்லை. ஆயிரம் சமாதானங்கள் சொன்னாலும் மனம் உடனே கேட்டு விடுமா என்ன? கேவலமான மனம் தீயதைத்தான் நினைத்துக் கலங்கும் அந்தக் கலகத்தைச் சிவன் நீக்கியது மாணிக்கவாசகர் கூறியது போலச் செயற்கரியச் செயலாகும்” என்று நினைத்தாள் கவிதா.

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்

வேண்டேன் மண்ணும் விண்ணும் வேண்டேன் பிறப்

பிறப்புச்சிவம் வேண்டார் தமைநாளும் தீண்டேன்சென்று

சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை இறைதாள்

பூண்டேன்புறம் போகேன் இனிப் புறம்போகலொட் டேனே. 07

“சுவாமியாரின் பேச்சு முடிந்ததும் கதிரேசனிடம் மகாலிங்கம் வந்து சொன்னான்; “அண்ணை, துரைசிங்கத்தின் பிள்ளைகளெல்லாம் வெளிநாடுகளில் இருக்கின்றனர்.. அவனும் மனைவியும் வெளிநாட்டுக்கு பிள்ளைகளோடு செல்லப் போகிறார்களாம். அவர்களது சொத்து முழுவதையும் விற்கப்போவதாகக் கூறுகிறான். அவன் உங்கள் இரத்த உறவினன். அதனால் அதை அவன் வேறு யாருக்கும் விற்க விரும்பவில்லை. உங்களுக்கு விற்றால் அது தனது சொத்துப் போல இருக்கும் என்கிறான். உங்களுக்கென்றால் மலிந்த விலையில் தருவதாகச் சொல்கிறான்.”

“எனக்கேனடப்பா காணி பூமி. இப்போதைக்கு நான் குடியிருக்க ஒரு வீடு தேவை. அதைத்தவிர ஏனையவற்றைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டேன். அவர்களுக்குக் கிராமம் பிடிக்கவில்லையாம். பட்டணமென்றால் தமக்குப் பெரும் வசதியென்றனர். அவர்கள் நான் கொடுத்த சொத்தை விற்றுவிட்டுப் பட்டணத்தில் வாங்க விரும்புகிறார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லினர். அதனால், “எனக்காக எதையும் நீங்கள் செய்யாது விடவேண்டாம். எனக்குப் பற்றுப் பாசம் எதுவுமில்லை. நீங்கள் விற்று விட்டுப் பட்டணத்தில் வாங்குங்கள்” என்று கூற அவர்கள் யாவற்றையும் விற்றது உனக்குத் தெரியும். எனக்கு மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல” எனக்குப் புகழும் வேண்டாம், காணியும் வேண்டாம், பூமியும் வேண்டாம், மண்ணும் வேண்டாம், விண்ணும் வேண்டாம். சிவனைத் தவிர வேறு எதுவும் வேண்டாம், அவை யாவும் பற்றை உண்டாக்கிவிடும். பற்றில்லாத அவனைத் தவிர பற்றுள்ளவற்றோடோ, பற்றுள்ளவர்களுடனோ தொடர்பே வைக்கமாட்டேன். அதனால் இனி அது பற்றிக் கதைக்காதே” என்றார்.

கோற்றேன்எனக் கென்கோகுரை கடல்வாய் அமுதென்கோ

ஆற்றேன்எங்கள் அரனே அருமருந்தே என தரசே

சேற்றார்வயல் புடைசூழ் தரு திருப்பெருந்துறை உறையும்

நீற்றார்தரு திருமேனிநின் மலனே உனையானே 08

மாகலிங்கம் ஏதோ சொல்ல முற்பட்டான். அதற்கு முன் குறுக்கிட்டுக் கதிரேசன் சொன்னார்; “வீணான பேச்சைக் கதைக்காதே. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போலச் சிவன் பிறவிப்பிணிக்கு மருந்தானவன். கொம்புத்தேனையும் பாற்கடலில் எழுந்த அமிர்தத்தையும் போன்றவன். அவனது சுற்றத்தில் இருக்கும் நான் எதையும் அணுவளவு கூட விரும்பவில்லை. இப்போ இங்கு பூமியின் விலை பத்து வருடங்களுக்கு முன்பிருந்ததை விட ஐந்து மடங்கு அதிகரித்து விட்டது. யார் கூடக் கேக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லு. இதுபற்றி நான் யாரோடும் கதைக்க விரும்பவில்லை. தொடர்ந்து நீ கதைத்தாயேயானால் உனது உறவைத் துண்டித்து விடுவேன்” என்று மிக மிக அமைதியாகச் சொன்னார்.

“சிவராமன் வாங்க விரும்புகிறான். ஆனால் துரைசிங்கத்திற்கு அது விருப்பமில்லை” என்றான் மகாலிங்கம். “அதை ஏன் என்னிடம் சொல்கிறாய். அவனின் தோட்டக் காணியின் ஒரு எல்லை என்னுடையது. அதைப் பிள்ளைகளுக்கு கொடுக்க,

அதை அவர்கள் விற்று விட்டனர். அவர்கள் விற்கும்போது கூட நான் அதில் தலையிடவில்லை. நீ இப்போ சிவபக்தன் என்கிறாய். இது தானா ஒரு சிவபக்தனின் விருப்பம்" என்று கேட்டார் கதிரேசன்.

மகாலிங்கம் அதன் பின் எதுவும் பேசாது சென்று விட்டான். துரைசிங்கம் வந்து கேட்டபோது சொன்னான்; "நீ யாருக்காவது வில்" என்று கதிரேசன் கூறிவிட்டார். இனி அவருடன் கதைக்க முடியாது.

எச்சம் அறிவேன்நான்எனக் கிருக்கின்றதை அறியேன்

அச்சோ எங்கள் அரனே அரு மருந்தே எனதமுதே

செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்

நிச்சம்என நெஞ்சில்மன்னி யானாகிநின் றானே. 09

மகாலிங்கம் மறுத்தமையால் துரைசிங்கம் நல்லைநாதனிடம் வந்து தனது சொத்துக்கள் பற்றிக் கதைத்தபோது நல்லைநாதன் சொன்னான்; "கதிரேசண்ணை சிவனின் வசப்பட்டுவிட்டார். அவர் தனது பூமியைப் பிள்ளைகளுக்கு பங்கீடு செய்து கொடுத்தபோது அதை அவர்கள் விற்க நினைத்தனர். அவர் அதை மனகிழ்வுடன் ஏற்றுக் கொண்டவர். எந்த ஆசையும் இல்லாத அவரைக் கருவி காரணங்கள் எதுவும் செய்யாது. ஆசைகள் இல்லாத ஓர் உயிரும் சிவனும் ஒன்று என்று சைவசமயம் கூறுகிறது. அது சிவஞானமாகும். அந்த நிலையில் உள்ளவர்கள் சிவனைத்தவிர வேறு எதையும் நாடமாட்டார். அவர் தனது மகளுக்கு வீட்டைக் கொடுத்தவர். அப்போது சொன்னார்; "மகளே, உனது சகோதரர்கள் நான் கொடுத்தவற்றை விற்றுவிட்டுப் பட்டணத்தில் நல்ல வசதியான வீடுகளை வாங்கிவிட்டனர். எனக்காக இவ் வீட்டை நீ விற்காது விடாதே. விற்க விரும்பினால் விற்றுவிடு. நான் எங்காவது ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கிறேன். இல்லாவிட்டால் மடத்தில் இருக்கிறேன்" என்றவர். அப்படியானவருடன் எதுவும் கதைக்க முடியாது."

துரைசிங்கம் எதுவும் பேசவில்லை. மிகுந்த துயரத்துடன் சென்றான்.

வான்பாவிய உலகத்தவர் தவமே செய அவமே

ஊன்பாவிய உடலைச் சுமந்தடவிமர மானேன் தேன்பாய்

மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை உறைவாய்

நான்பாவியன் ஆனால் உனை நல்காயென லாமே. 10

வழமையாகக் காலையில் கதிரேசனின் வீட்டுக்கு வரும் நல்லைநாதன் கதிரேசனின் வீட்டுக்கு வந்தபோது கதிரேசன் சொன்னார்; "நல்லை எனது நிலை உனக்குத் தெரியும். என்னைச் சிவனோடு மகிழ்ந்திருக்க விடுங்கள். ஊர்ப்பிரச்சினைகள், இனத்தவர்களின் பிரச்சினைகளைச் சொல்லாதீர்கள். எனது மகள்தான் வீட்டை விற்க போகிறாளாம். என்னைப் பட்டணத்தில் உள்ள வீட்டுக்கு வரட்டாம். நான் எங்கும் செல்லமாட்டேன். நீ வீட்டை விற்றுவிடு என்று சொல்லி விட்டேன். அவள் அதற்கு எத்தனையோ விளக்கம் சொன்னாள். நானும் மனைவியும் வயதானவர்களாம். தற்செயலாக ஒரு துன்பமான சம்பவம் நடைபெற்றால் தாம் வந்து சேரப் பல மணி நேரமாகும். இறுதிக்காலத்தில் வயதானவர்கள் பிள்ளைகளின் துணையோடு வாழ வேண்டும்" என்றாள். எனது பிள்ளைகள் எல்லோரும் அதைத்தான் சொல்கின்றனர். நான் பிறந்து வளாந்த மண்ணையும், பிறந்த காலத்தில் இருந்து வணங்கிய சிவனையும் எப்படிப் பிரிவேன். பிறப்பதே துன்பம். துன்பத்திலும் துன்பம் பிள்ளைகளின் இனத்தவர்களின் தொல்லைகள். என்னுடன்கூட இருப்பவன் வல்லிபுரம். அவனது குடும்பம் என்னைக் கவனியாதா..? அது போகட்டும் எனக்கேதாவது நடக்கச் சிவன் விடுவாரா..? ஏதாவது நடந்தால் நீ வரமாட்டாயா...?" என்று கேட்டார் கதிரேசன்.

"அண்ணை, உங்களுக்குதவச் சிவனே மனித மூலம் எடுத்து வருவான். மேலோர் சிவனை நினைத்துத் தவம் செய்கின்றனர். நான் உடலைச் சாந்துள்ளவள். என்னை எதையும் பார்க்காது ஆட்கொள்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை இரப்பதுபோல நீங்களும் இரக்கிறீர்கள். அப்படி இரக்கும் உங்களைச் சிவன் கைவிட்டு விடுவானா..? பிள்ளைகள் பெற்றோரைத் தனிமையில் விட விரும்பமாட்டார்கள். அவர்கள் தொழில் செய்யும் இடங்களைவிட்டு விட்டு வரமுடியுமா...?" என்று நல்லைநாதன் சொன்னபோது கதிரேசன் சொன்னார்; "யார் அவர்களை விட்டுவிட்டு வரச்சொன்னது...? எனது பிள்ளைகளைப் போலத்தான் நீயும் சிந்திக்கிறாய். உறவுகள் ஒருநாள் பிரியத்தான் வேண்டும். அது தொழில் காரணமாக இருக்கலாம். மரணம் காரணமாக இருக்கலாம். பலரின் பிள்ளைகள் வெளிநாடுகளில்தானே இருக்கின்றனர். அவர்களெல்லாம் கவலைப்படுகிறார்களா...? எல்லாம் சிவன் என்று நம்பினால் எல்லாவற்றையும் சிவன் செய்வான். அதை நீ நம்பவில்லையா..?" என்று கேட்டார் கதிரேசன். நல்லைநாதனால் அதற்குப் பதில்கூற முடியவில்லை.

திருச்சிற்றம்பலம்.